மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.05/2022
உள்
அசல் வழக்கு எண்.26/2020

-------------

ஆர்.எஸ்.ராகுல்
(வாதியின் பவர் ஏஜெண்ட்
ரேணுகா மூலம்) ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தனலட்சுமி
2. வட்டாட்சியர் அவர்கள்
   சாத்தூர்
3. சார்பதிவாளர் அவர்கள்
   சாத்தூர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 13.09.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 06.02.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ஆர்.முருகன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுதாரர்/

வாதிக்கு எதிராக 08.07.2022ம் தேதி நீதிமன்றம் பிறப்புவித்த Dismissed for Default உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை கோப்பிற்கு எடுத்து உத்தரவிடக்கோரி 11.08.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

அசல் வழக்கானது வாதி தரப்பு சாட்சியத்திற்காக விசாரணைப் பட்டியலில் போடப்பட்டு 08.07.2022ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. வாதி தனது மகனான ராகுல் என்பவரின் பவர் ஏஜெண்டு நிலைமையில் இருந்து மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி தேதியில் மனுதாரர் தனது மகளின் பிரசவத்திற்காக கோயம்புத்தூர் சென்றிருந்த காரணத்தினாலும், மேற்படி மனுதாரரின் மகன் வெளிநாட்டில் இருந்து வந்த காரணத்தினாலும், தாவா வழக்கின் விசாரணையின்போது ஆஜராக இயலவில்லை. மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாகும். மேற்படி வழக்கு சம்மந்தமாக மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை தற்போது சந்தித்து விபரம் கேட்டபோது தான் மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதிக்க எதிராக நீதிமன்றம் மேற்படி வழக்கை Dismissed for Default என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. எனவே, வழக்கை கடந்த 08.07.2022ம் தேதி நீதிமன்றம் பிறப்பித்த Dismissed for Default உத்தரவை ரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. இல்லாதுபோனால் மனுதாரருக்கு அனேக கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும். எனவே, நீதிமன்றம் பிறப்பித்த Dismissed for Default உத்தரவை ரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). (2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.04/202 மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இ.ம.எண்.05/2022 மனுவில் ஏற்றுக்கொள்ளுமாறு மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது) 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.04/2022 மனுவில் தாக்கல்</u>**

**<u>செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மனுதாரர் வாதியின் பவர் ஏஜெண்ட் என்று கூறி அபிடவிட் தாக்கல் செய்துள்ளார். ஆனால் மனுவிற்காக தனியாக கட்டளை 3 விதி 2 சிபிசி-ன் கீழ் மனு தாக்கல் செய்ய கிடையாது. மேலும், 03.02.1996ம் தேதிய பத்திரத்தை ரத்து செய்ய கோரியுள்ளார். அதனால் பத்திரத்தை நீக்கரவு செய்யும் அதிகாரமானது மாவட்ட பதிவாளருக்கு மட்டுமே உள்ளதால் அவரை வழக்கிலும், மனுவலும் அவசிய கட்சியாக சேர்க்க வேண்டும். அதனால் அவசிய கட்சியை சேர்க்காத தோசத்தால் தாவா மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். மேலும் அசல் வழக்கானது பட்டியல் வழக்காக போடப்பட்டு, வழக்கு பலமுறை ஒத்தி வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாததால் கட்நத 08.07.2022ம் தேதியில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட Sufficient Cause ஏதும் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை 2, 3 எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**<u>7). தீர்வு:-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது.

எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் மனுதாரர்/வாதிக்கு எதிராக 08.07.2022ம் ததி நீதிமன்றம் பிறப்புவித்த Dismissed for Default உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை கோப்பிற்கு எடுத்து உத்தரவிடக்கோரி 11.08.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக் கூடும். மேலும், இ.ம.எண்.04/2022 மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள், இ.ம.எண்.04/2022 மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மனுதாரர்/வாதிக்கு எதிராக 08.07.2022ம் தேதி நீதிமன்றம் பிறப்புவித்த Dismissed for Default உத்தரவை ரத்து செய்து மீண்டும் வழக்கை கோப்பிற்கு எடுத்து உத்தரவிடக்கோரி 11.08.2022ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து, இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.